**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| பெயர் | - | திரு. மாயகண்ணன் | அசல் வழக்கு எண். | 68/2022 |
|---|---|---|---|---|
| த/பெ. | - | நடேசன் | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

01.07.2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் புதுச்சேரியில் உள்ள முதலியார்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். என் மகன்கள் என்னுடன்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எவ்வளவு ஆண்டு காலமாக முதலியார்பேட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றால் 50 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். முதலியார்பேட்டையில்தான் எனக்கு குடும்ப அட்டை, ஆதார் அட்டை உள்ளது என்றால் சரிதான்.

2. நான் கழுப்பெரும்பாக்கத்தில் பூர்வீகமாக இருந்து வந்தேன் என்பதற்காக ஆவணங்கள் ஏதாவது என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் வெள்ளைச்சியம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 ஆவணங்களில் வெள்ளைச்சியம்மாள் பெயரில் எந்த கிரைய ஆவணங்களோ, பட்டாவோ, ரசீதுகளோ இல்லை என்றால் சரிதான். வெள்ளைச்சியம்மாள் பெயரில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் தாவா சொத்துக்கள் வெள்ளைச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணத்தை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் வெள்ளைச்சியம்மாள் என்பவருக்கு தாவா சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்ற எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

4. வெள்ளைச்சியம்மாள் இடம் இருந்து நான் எவ்வளவு செண்ட் பூமி வா.சா.ஆ 1 ன்படி கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் 30 செண்ட் வாங்கியுள்ளேன். நான் கிரையம் வாங்கிய 30 செண்ட் பூமியானது மொத்தம் உள்ள 78 செண்டில் இருந்து வாங்கியது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.14/3A-வில் 42 செண்ட், 14/3 பி -யில் 23 செண்ட், 14/3 சி-யில் 13 செண்ட் என்று குறிப்பிட்டு வா.சா.ஆ.1 ல் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் படி கிரையம் வாங்கிய 30 செண்ட் பூமியானது சர்வே நெம்பர் குறிப்பிட்டு கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

5. சர்வே எண்.14/3 சி-யில் எவ்வளவு விஸ்தீரணம் நான் கிரையம் பெற்றேன் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான், நான் தனித்தனியாக பிரித்து எழுதி வாங்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சக்குபந்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் சக்குபந்தியில் நாராயணசாமி புஞ்சைக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாராயணசாமிதான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் சகோதரிதான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 3 முதல் 7 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் சரிதான்.

6. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் திருத்தப்பட்ட வழக்குரையில் சக்குபந்தி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு உரிமையான சொத்துக்கள் என்பதால்தான் வழக்குரையில் தாவா சொத்தின் சக்குபந்தியை நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

தாவா சர்வே எண்ணில் 13 செண்ட் விஸ்தீரணம் புருபத்தில் இல்லை என்றும் 7-3/4 செண்ட்டுதான் உள்ளது என்று எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 7-3/4 செண்ட்டை நான் அனுபவித்து வருவதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. தாவா சொத்திற்கான பட்டா எண்.572 என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பட்டாவானது யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயர் மற்றும் 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. தனி பட்டாவாக நான் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். என் குடும்ப சொத்துக்களை நானும் எனது குமாரர்களும் வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி பாக பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தை தயார் செய்தவர் பத்திர எழுத்தர் முத்துநாராயணன் என்றால் சரிதான்.

8. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் 3 வது பக்கத்தில் " நான் பாகம் பிரித்துக்கொள்ளவேண்டிய ஜங்கம சொத்துக்கள் ஏதும் இல்லை " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் பக்கம் 14 ல் நாராயணசாமி புஞ்சைக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள நராயணசாமிதான் 1 ம் பிரதிவாதி என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமே தாவா சொத்திற்கு மேற்கு புறம் 1 ம் பிரிவாதியான நாராயணசாமி இடம் உள்ளது என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

9. நானும் எனது குமாரர்களும் பத்திர அலுவலகத்திற்கு சென்று வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். தாவா சொத்தை அடையவேண்டும் என்பதற்காக 1 ம் பிரதிவாதிதான் வா.சா.ஆ.2 ஆவணத்தை தயார் செய்தார் என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. சர்வே எண்.14/3 சி-யில் எனக்கு 3 செண்ட் பூமி மட்டுமே பாத்தியம் என்றும் அதற்கு மேல் எனக்கோ என்னுடைய கிரயதாரரான வெள்ளைச்சியம்மாளுக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்திற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் இல்லை.

வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்திற்கு வழக்கறிஞரிடம் கருத்துரை கேட்டேனா என்றால் இல்லை.

10. எதிர் வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு தாவா சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். நான் வில்லங்கம் பார்த்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளுக்கு நான் வில்லங்கம் போட்டு பார்த்தேன் என்றால் 40 முதல் 45 ஆண்டுகளுக்கு போட்டு பார்த்தேன். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி வெள்ளைச்சியம்மாளிடம் அடமானம் வைத்த வில்லங்கம் நான் பார்த்த வில்லங்கத்தின் மூலம் தெரியவந்தது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு 1ம் பிரதிவாதி மேற்படி அடமானத்தை பைசல் செய்த விபரமும் வில்லங்கத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெள்ளைச்சியம்மாளின் கணவர் பெயர் வைத்தியலிங்க தம்பிரான் என்றால் சரிதான். வைத்தியலிங்க தம்பிரான் அப்பா பெயர் பழனி தம்பிரான் என்றால் சரியல்ல, அவர் பெயர் சுப்பராய தம்பிரான்.

11. பழனி தம்பிரான், குருநாத தம்பிரான், மாணிக்க தம்பிரான், வேலு தம்பிரான் ஆகியோர்கள் சகோதரர்கள் என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.14/3 சி-யில் உள்ள 11 செண்ட் பூமியும் பழனி தம்பிரான், குருநாத தம்பிரான், மாணிக்க தம்பிரான், வேலு தம்பிரான் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.14/3 சி-யில் வெள்ளைச்சியம்மாள் என்பவரின் கணவரான வைத்தியலிங்க தம்பிரானுக்கு பாத்தியப்பட்டது என்று 3 செண்ட் பூமிதான் என்றால் சரியல்ல, 7-3/4 செண்ட் ஆகும். சர்வே எண்.14/3 சி-யில் 3 செண்ட்டு பூமிக்கு மேல் வெள்ளைச்சியம்மாளுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

12. 1ம் பிரதிவாதி கிராம நிர்வாக அலுவலராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே வேறு எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான்.1ம் பிரதிவாதிக்கு எதிராக வேறு எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் வேறு எந்த பட்டாவிலும் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் தவறுதலாக பல சர்வே எண்களுக்கான பட்டாக்களில் சேர்க்கப்பட்டுள்ளது என்று எனது முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பேரில் இரு தரப்பிலும் விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான், போலீஸ் விசாரணையில் இரு தரப்பினர் பத்திரத்தின் அடிப்படையில் அளவீடு செய்து பிரச்சனையை தீர்த்துக்கொள்ளுமாறு கூறினார்கள் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணைக்கு பின்பு பத்திரத்தின் அடிப்படையில் சொத்துக்கள் அளவீடு செய்யப்பட்டது என்றும் அதனை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. தாவா சொத்துகள் ஆதியில் வேலு தம்பிரான் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரது காலத்திற்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் அனுபவித்து வந்து அவரிடம் இருந்து 1ம் பிரதிவாதியின் தாயார் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பாக விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தின் சொத்து விபரத்தில் தமிழ்மணி புஞ்சைக்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை 1ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் பாக பிரிவினை செய்துகொண்ட பின்பு 4ம் பிரதிவாதிதான் தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

14. வா.சா.ஆ 6 ஆவணத்தின் சொத்து விபரத்தில் தமிழ்மணி புஞ்சைக்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் நாளது வரையில் 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றும் அதனை மறைத்து பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எந்த காலத்திலும் வெள்ளைச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்டிருந்தது இல்லை என்றும் அதனை அனுசரித்து நானும் தாவா சொத்துக்களை எந்த காலத்திலும் அனுபவித்தது இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களை அடையவேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the presence of the withess read over th the witness are admitted by him/her to be correct.

District Munsif
Vanur.

**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.</u>**

திரு.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. | அசல் வழக்கு எண். | 108/2022 |
| த/பெ. | - | | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

01.07.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**